Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி எண் 49

ஈழநாடு

சந்தா விபரம்

| | இந்தியா — வாரப்பதிப்பு உட்பட | இலங்கை வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

மலர் 7 யாழ்ப்பாணம் குரோதி மாசி 21-ஆம் நாள் ஷவ்வால் பிறை 29 (4 3 65) வியாழக்கிழமை இதழ் 24

பருத்தித்துறை

# கடலில் கதிரியக்க உபகரண வசதிகள்

## இந்திய கோரிக்கையை இலங்கை நிராகரித்தது

### அபாயம் ஏற்படலாம் என அச்சம்

கொழும்பு, புதன்

**சேது சமுத்திரத் திட்டம் சம்பந்தமாக இலங்கை அரசாங்கத்துக்கு இந்திய அரசாங்கம் விடுத்திருந்த கோரிக்கையொன்றுக்கு இணங்க, இலங்கை மறுத்துள்ளது. சேதுசமுத்திரத் திட்டம் சம்பந்தமாக சில ஆராய்ச்சிகள் நடத்தும் பொருட்டு பருத்தித்துறைக்கு அண்மையிலுள்ள கடலில் கதிரியக்க உபகரணங்களை இறக்குவதற்கு இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திடம் அனுமதி கோரியிருந்தது. இக்கோரிக்கையைத்தான் இலங்கை நிராகரித்துள்ளது.**

குறிப்பிட்ட திட்டம் சம்பந்தமாக பருத்தித்துறைக்கு சமீபத்திலுள்ள கடலில் சில மாதிரி மண் எடுக்கும்பொருட்டு கதிரியக்க உபகரணங்களை போடுவதற்கு இலங்கையிடம் இந்தியா அனுமதி கோரியிருந்தது. இக்கோரிக்கையை இந்தியா கடிதம் மூலம் கடந்த ஜனவரி மாதம் இலங்கை வெளிநாட்டு அமைச்சிடம் சமர்ப்பித்திருந்தது.

கடல் தண்ணீரில் அணுக்கதிரியக்க உபகரணங்களை போடுவதால், இலங்கை மக்களுக்கு குறிப்பாக மீனவர்களுக்கு அபாயம் எதுவும் இருக்காது என்பதை தங்களது பரிசோதனை மூலம் நிரூபித்த பின்னரே இப்படியான கோரிக்கைக்கு இணங்க முடியும் என்று இலங்கை அரசாங்கம் தனது பதில் கடிதத்தில் தெரிவித்திருப்பதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மூலம் தெரியவருகின்றது.

இந்திய சேதுசமுத்திரத்திட்டத்தின்படி பாசநீரிணையின் ஆழம் அதிகரிக்கப்படலாம் என இந்திய அரசாங்கம் எதிர்பார்க்கிறது. பெரிய கப்பல்கள் நீண்ட தூரம் பிரயாணம் செய்வதை புதிய திட்டம் தவிர்க்கக் கூடியதாக இருக்கும் எனவும் இந்தியா கருதுகின்றது.

## 90,000 தொன் அரிசி தேவை

கொழும்பு, புதன்

இவ்வருடத்தில் நாட்டில் ஏற்படவிருக்கும் அரிசிப் பற்றுக்குறையைப்போக்க 90,000 தொன் அரிசி தேவைப்படுவதாக உணவுப் பகுதி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## கியூ வரிசையில் 14 கப்பல்கள்

கொழும்பு, புதன்

நேற்று, கொழும்பு துறைமுகத்துக்கு வெளியே 14 கப்பல்கள் நின்றன. இன்று அதிகாலை மேலும் மூன்று கப்பல்கள் இங்கு வரும் என எதிர்பார்க்கப்பட்டது.

## கைத்தொழில் பொருட்காட்சி

கொழும்பு, புதன்

நேற்றுவரை கொழும்பு கைத்தொழில் பொருட்காட்சியை 22,00,828 பேர் பார்வையிட்டனர்.

## தாயகம் திரும்ப இந்தியர்கள் விருப்பம்

### பலர் தம்மிடம் நேரில் தெரிவித்ததாக இலங்கரத்ன தகவல்

நிகிலஸ்கட, புதன்

அண்மையில் இலங்கைப் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கும் இந்தியப் பிரதமர் சாஸ்திரிக்குமிடையே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினர் வரவேற்றுள்ளனர் என்றும் தாயகம் திரும்ப அவர்கள் விருப்பங் கொண்டுள்ளனர் என்றும் உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக விநியோக மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன தெரிவித்துள்ளார்.

ஹங்குரன்கெத்த எனுமிடத்தில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் தான் திரு. இலங்கரத்ன மேற்கண்டவாறு கூறினர். இக்கூட்டத்துக்கு பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமைவகித்தார்.

திரு. டி. பி. இலங்கரத்ன தொடர்ந்து பேசுகையில் தமது கொள்கைக்கு ஆதரவு தெரிவித்து பல இந்தியர்கள் தமது பிரச்சார கூட்டங்களில் உரை நிகழ்த்தியிருக்கிறார்கள் என்றும் கூறினர்.

ஸ்ரீமாவோ-சாஸ்திரி ஒப்பந்தம் காரணமாக இந்நாட்டை விட்டு வெளியேறி தாயகம் செல்வதற்கு தாங்கள் முழு விருப்பம் கொண்டிருப்பதாக தம்மிடம் இந்தியர்கள் பலர் தெரிவித்ததாகவும் திரு டி. பி. இலங்கரத்ன கூறினர்.

## வாக்குரிமை சீட்டு விஷயத்தில் கவலையீனம்

### தபால் சேவகர்கள் மீது புகார்

காங்கேசன் துறை, புதன்

தபால்மூலம் அனுப்பும் வாக்குரிமைச் சீட்டுகளை விநியோகம் செய்யும் தபால் ஊழியர்கள், அவற்றை உரிய விலாசதாரரிடம் சேர்ப்பிக்காது கண்ட இடங்களில் எறிந்து விட்டுப் போவதாயும், இதனால் வாக்களிக்கும் சமயத்தில் அவர்கள் அநாவசிய தொல்லைக்குள்ளாகவேண்டியிருக்குமென்றும் காங்கேசன்துறை பட்டினசபை உபதலைவர் திரு. வி. இரத்தினராசா தபால், தகவல் மந்திரிக்கும் தபால் அதிகாரிக்கும் எழுதியுள்ள கடிதத்தில் புகார் செய்திருக்கிறார்.

இவ்விஷயமாக தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்படியும் அவர்கள் இருவரையும் அவர் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

"அரசாங்கம் மக்களின் நன்மையைக் கருதி தபால் மூலம் அனுப்பும் வாக்குரிமைச் சீட்டை கடமையுணர்ச்சியுடன் உரிமையாளர்களிடம் சேர்ப்பதுதான் தபாற் சேவகரின் கடமை. அவர்கள் கவலையீனமாக நடப்பது சரியல்ல" என்றும் கடிதத்தில் கூறப்பட்டிருக்கிறது.

## ஐ. தே. கட்சியில் சேர்ந்தார்

அநுராதபுரம், புதன்

முன்னாள் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி செனட்டரும் கைத்தொழில் மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்காவின் மாமனாருமான திரு. கே. வி. கே. தலகரத்ன ஐக்கிய தேசியக்கட்சியில் சேர்ந்துள்ளார்.

## மாபெரும் கூட்டம்

உடுவில் தொகுதி தமிழ் காங்கிரஸ் அபேட்சகர்

திரு. ந. சிவநேசன் B Sc (Econ) Hons Lond,

அவர்களை ஆதரித்து இன்று வியாழக்கிழமை (4-3-65) மாலை 6 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரிக்கு அண்மையில் நடைபெறும்.

பிரதம பேச்சாளர்: திரு ஜி. ஜி. பொன்னம்பலம்

வடபகுதி அசைவு

## 'கத்தியிலும்; பிடியிலும் மனித இரத்தம் இருந்தது'

### முகமாலை கொலை வழக்கில் ரசாயன பரிசோதகர் சாட்சியம்

யாழ்ப்பாணம், வியாழன்

முகமாலைக்கொலை கொலைமுயற்சி வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் திரு. பி. சிறிஸ்கந்தராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் 63-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1-ம் திகதி சின்னத்தம்பி - சின்னக்குட்டி; சின்னத்தம்பி-கணபதி ஆகியோர் ஆறுமுகம் என்பவரை கொலை செய்ததாகவும், சின்னக்குட்டி-நாகமுத்துவைக் கொலைசெய்ய முயற்சித்ததாகவும், 1-ம் எதிரி, சின்னப்பொடி-காசிப்பிள்ளையைக் கொலைசெய்ய முயற்சித்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

உதவி சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கந்தையா ஜோன் கணபதிப்பிள்ளை சாட்சியமளித்தபோது கூறியதாவது:-

"காலை 63-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1-ம் திகதி பரிசோதனை செய்தேன், கையிலும் தொடையிலும் காயங்கள் காணப்பட்டன. முழங்காலுக்கு மேல் சன்னங்கள் பட்ட அடையாளம் காணப்பட்டன. இக்காயங்கள் துப்பாக்கிச் சூட்டினால் ஏற்பட்ட காயங்களே!

அரசாங்க ரசாயன பரிசோதகர் கரு. சிறிமானே சாட்சியமளித்தபோது, காட்டுமரக் கொப்புகளை கட்டிக்காட்டி, சன்னங்களினால் ஏற்பட்ட துவாரங்கள் இக்காட்டுமரங்களிலும், பனம் மட்டைகளிலும் காணப்படுவதாகத் தெரிவித்தார். கொடுவாக்கத்தியிலும், அதன் பிடியிலும், துவக்குப்பிடியிலும், மனித இரத்தம் காணப்பட்டதாகவும் அவர் மேலும் சாட்சியமளித்தபோது கூறினர்.

சின்னப்பொடியன்-காசிப்பிள்ளையும் சாட்சியமளித்தார். மேல்விசாரணை இன்றுகாலை வரை ஒத்திபோடப்பட்டது

### மணிவாக்கு

பத்துத்தடவை கீழே விழுந்தாலும் நம்பிக்கையை இழந்துவிடாதே. நூறுமுறை விழுந்தாலும் மனம் தளராதே. ஆயிரம் தடவை விழுந்தாலும் எழுந்து தைரியமாக நட. தோல்விகளில்லாமல் ஜயம் வருவதில்லை, தோல்வியே ஜயத்துக்குப் போகும் பாதையில் பதிக்கப்பெற்ற படிகள்.

—சுவாமி சிவானந்தர்


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு மாசி மீ 21 உ (4-3-65)


## பூநகரிப்பாதை

பூநகரி - யாழ்ப்பாணம் பாதை இன்னும் பூர்த்தியாகாததால் இவ்விரு பகுதிகளுக்கு மட்டுமன்றி நாட்டுக்கும் பாதகமாகும். பல இடங்களிலே நீண்ட தாம்போதிகள் குறுகியகாலத்தில் அமைக்கப்பட்டிருந்தும், பூநகரி தாம்போதி மட்டும் வருடக்கணக்காகப் பூர்த்தியாகாமல் விடப்பட்டுள்ளது பெரிய குறையாகும்.

இது காரணமாக பூநகரிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட முடியாமல் இரு பகுதி அபிவிருத்திக்கும் பெருந்தடையாகவுள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரி வழியே கொழும்புக்கு ரஸ்தா போடப்பட்டிருந்தும் இரு நகரங்களுக்குமுள்ள தூரம் மற்ற வவுனியா பாதையைவிட சுமார் ஐம்பது மைல்களுக்குமேல் குறைவென்றாலும் இங்கு போக்குவரவு மிகக் குறைவு. காரணம், பூநகரியிலுள்ள கடல் பாலம் இன்னும் பூர்த்தியாகாமலுள்ளதும், இந்த ரஸ்தா மிக மோசமாகவுள்ளதும்தான்.

பெரும்பகுதி பாலம் பூர்த்தியாகிவிட்டது. இன்னும் அரை மைல் தூரத்துக்குத்தான் பாலம் அமைக்கவேண்டும். அரசாங்கம் நினைத்தால் இந்த அரை மைல் பாலத்தையும் சில மாதங்களில் போட்டுவிட முடியும். என்றாலும் வருடக்கணக்கிலே இது தாமதிக்கப்பட்டுவருகின்றது. மேலும் இந்த ரஸ்தா ('பி') இரண்டாம் பட்சமாகவே கருதப்படுகிறதாம். என்றாலும் இதன் பராமரிப்புக்கு அரசாங்கம் வருடாவருடம் போதிய பணம் அனுமதிக்கின்றது' அப்படி இருந்தும் சில 'பெருச்சாளி'கள் இந்தப் பணத்தில் பெரும் பகுதியையும் விழுங்கிவிடுவதாயும், இதைப்பற்றி மேலதிகாரிகளும் கவனிக்காமல் அலட்சியமாக, இருப்பதுயும். அதனுல்தான் மிக முக்கியமான இப்பாதை இவ்வளவு மோசமான நிலையில் இருப்பதாயும் காரணம் கூறப்படுகின்றது. இதுவரை யார் இதற்குக் காரணமாயினும சரி. பொது மக்களின் மேலான வசதியையும், நாட்டின் நன்மையையும் கருதி இப்பாலத்தைப் பூர்த்தி செய்வதுடன், இந்த ரஸ்தாவையும் மேலான முறையில் வைத்திருக்க இப்போதுள்ள அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பொது மக்களும் அவர்களது பிரதிநிதிகளும் இம் முக்கிய விஷயத்தில் இனியும் அசமந்தமாக இருக்க முடியாது. அரசாங்கம் தங்களிடம் பணமில்லை யென்று பல்லவி பாடாதென்றே நம்புகிறோம், அப்படிப் பாடுவதாயினும், இப்பகுதியிலுள்ள பொது மக்கள் மனம்வைத்து சுயமுயற்சி செய்ய முன்வரின் இந்தப் பாலம் சில மாதங்களில் பூர்த்தியாகிவிடக் கூடும். இந்த வேலைக்கு பெரிதும் தேவையானவை கற்கள்தாம். அவற்றைக் கொண்டுவந்து சேர்த்து அப்பகுதியில் கொட்டவேண்டும். வேறு தொழில் நுட்ப உதவிகள் விசேஷமாகத் தேவையில்லை; இங்கு கடல் நான்கு அல்லது ஐந்தடி ஆழத்துக்கு மேலில்லை. இப்பகுதியிலுள்ள தமிழ்ப் பொது மக்கள், சிரமதானமாக இந்த முக்கிய வேலையை ஆரம்பிக்க ஏன் முன்வரக் கூடாது? அப்படி முன்வரின் அதிக செலவு இல்லாமல் இந்தப் பாதை சீக்கிரத்தில் அமைக்கப்பட்டு இப்பகுதிகளுக்கே பல விஷயங்களிலும் நன்மையாவதுடன், தமிழரின் மதிப்பும் உயரக்கூடும். தொட்டதற்கெல்லாம் அரசாங்கத்தையே எதிர்பார்த்து கைகட்டிச் சும்மா தான் இருக்கவேண்டுமா?

## நாடுகடத்தும் கட்டளையை நிறுத்துமாறு உத்தரவு
### வெள்ளைசாமி வெளியேற்றம் குறித்து நீதிபதி கட்டளை

கொழும்பு, புதன்

'ஐரோ' தோட்டத்தைச் சேர்ந்த தோட்டத்துரை வி. வெள்ளைசாமியை இலங்கையிலிருந்து வெளியேறும்படி குடியேற்ற வெளியேற்ற இலாகா கமிஷனர் பிறப்பித்த கட்டளையை இந்த ஆண்டு ஜூலை 7-ந் திகதி வரை நிறுத்தி வைக்கும்படி பாதுகாப்பு வெளி விவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. என். கியூ. டயஸுக்கும், குடியேற்ற வெளியேற்ற இலாகா அதிகாரி திரு. டபிள்யு. டி. ஜெயசிங்காவுக்கும் கொழும்பு மாவட்ட நீதிபதி திரு. என். சிவஞானசுந்தரம் இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளார். அவ்விருவரையும் ஜூன் 4-ந் திகதியன்று கோர்ட்டில் ஆஜராகும்படியும் மேலும அவர் உத்தரவிட்டுள்ளார்.

திரு. வெள்ளைசாமியை நாட்டைவிட்டு வெளியேறும்படி பிறப்பித்த கட்டளையை எதிர்த்து திரு வெள்ளைசாமி கோர்ட்டில் விண்ணப்பித்திருந்தார். வழக்கு விசாரணைக்கு வந்தபோது திரு. வெள்ளைசாமியின் சார்பில் திரு. பி. நவரட்ணராஜா, வழக்கறிஞர் திரு. நிகால்ஜயவிக்கிரமா, வழக்கறிஞர் திரு. டொக் ஜே. பி. பெர்னாண்டோ ஆகியோரது அநுசரணையுடன் ஆஜரானார்.

திரு. வெள்ளைசாமி தனது மனுவில் குறிப்பிட்டிருப்பதாவது:

'1939ல் ஆறு வயதில் நான் இலங்கைக்கு வந்தேன். அன்று தொடக்கம் எனது தகப்பனுருடன் வசித்து வருகிறேன். 'ஐரோ' தோட்டத்திற்கு எனது தந்தை திரு. ஆர். வைத்திலிங்கமும் எனது உறவினர் திரு எஸ். தொண்டமானும் தான் பங்குதாரார்கள் நான் தான் இந்த எஸ்டேட் மேற்பார்வையாளர் 1940ல் ஒருமுறை வைத்திய சிகிச்சைக்காக இந்தியா பாஸ்போட்டில் இந்தியாசென்றிருந்தேன் திரும்பியதும் டி ஆர் பி பெற்றுக்கொண்டேன் 1955ல் நான் குடியேற்ற கட்டுப்பாட்டதிகாரி திரு எச் சி தென்னக்கூனை கேரில் கண்டபோது 1964 அக்டோபர் 16-ந் திகதி வரைதான் இலங்கையில் இருக்கலாம் என்றார் மேற்குறிப்பிட்ட திகதியில் என்னை கைது செய்தார்கள்.

7-7-65 வரை விசாவரி கட்டியதும் என்னை விட்டுவிட்டார்கள் பின்னர் வாசஸ்தலவிசா கேட்டு விண்ணப்பித்தேன் அதனை குடியேற்ற வெளியேற்றஇலாகா அதிகாரி திரு ஜெயசிங்கா சட்டத்திற்கு முரணான வகையில் நிராகரித்து விட்டார்

எனது தந்தை வாசஸ்தல விசாவில் இருப்பார் எனக்கு வாசஸ்தல விசா தருவதாய் இருந்தால் தனது விசாவை அரசாங்கத்திடம் ஒப்படைத்து விட்டு, தான் இந்தியா திரும்ப விருப்பம் தெரிவித்து அவர் திரு ஜெயசிங்காவுக்கு அறிவித்தார் எனக்கு வாசஸ்தல விசா வழங்காவிடில் அதனுல் நான் தாங்க முடியாத கஷ்டத்துக்கு ஆளாகக்கூடும் நான திரு தொண்டமானின் உறவினர் என்பதாலும் அரசியல் காரணங்களைக்கொண்டும் திரு டயஸும் திரு ஜெயசிங்காவும் எனக்கு விசா தர மறுக்கின்ருர்கள் இதற்காக என்னை அவர்கள் பழிவாங்கப் பார்க்கிருர்கள்

## விளையாட்டு அரங்கு திறப்புவிழா

சாவகச்சேரி, புதன்

"ஒரு சமூதாயத்தின் பொக்கிஷம் சிறுவர்கள்தான். ஒரு நாட்டின் முனேற்றமும் இவர்களின் கையில்தான் தங்கியிருக்கின்றது. அவர்கள் உடல் உள விருத்தி பெற்று வளர்ந்தால்தான வருங்காலத்தில் சிறப்பாக வாழ முடியும்" என்று சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. எம். அப்துல் காதர் சாவகச்சேரி நகரசபைக்கருகாமையில் அமைக்கப்பட்டுள்ள பாலர் விளையாட்டு மைதானத்தைத் திறந்து வைத்துப்பேசுகையில கூறினர்.

சாவகச்சேரி நல்வாழ்வுச் சங்கத்தினரால் அமைக்கப்பெற்ற இந்த பாலர் விளையாட்டு மைதானம் சாவகச்சேரி நகரசபைக்கு அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த திறப்புவிழாவில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ. சி. மாணிக்கவாசகர், நகரசசபைத் தலைவர் திரு இ. டா. சிவகுரு உட்பட வேறு பலரும் பேசினர். நல்வாழ்வுச் சங்கக் காரியதரிசி திரு. எட்வேட் நன்றி கூறினர்,

## கலாச்சார கோஷ்டியின் சுற்று விஜயம்

சுழிபுரம், புதன்

யாழ். மாவட்ட சன சமூக நிலையங்களின் சமாசத்தினரின் கலாச்சார சுற்றுப் பிரயாணம் முடிவடைந்தது. தாங்கள் சென்ற இடங்களெல்லாம் வரவேற்பளிக்கப்பட்டதாகவும் தென் இலங்கையின் சனசமூக இயக்கத்தின் வளர்ச்சியை அறியும் சந்தர்ப்பம் இதன் மூலம் கிடைத்ததாகவும் சமாசச் செயலாளர் நமது நிருபரிடம் கூறினர். சனசமூக இயக்கம் மக்கள் இயக்கமாக மாறுவதன் மூலம்தான் வளர்ச்சியடையும் என்பதை கலாச்சார சுற்றுப் பிரயாணத்தின்போது தெரிய வந்ததாகவும் செயலாளர் மேலும் கூறினர்.

## பிரார்த்தனை மண்டபம்

பருத்தித்துறை, புதன்

வரணி மகாவித்தியாலயத்திற்கு பிரார்த்தனை மண்டபம் ஒன்றைக் கட்டிக் கொடுக்க மந்துவிலைச்சேர்ந்த நல்லமாப்பாண முரலியார் இணக்கம் தெரிவித்துள்ளார்.

## லைசென்ஸ் யாருடையது?

யாழ்பாணம், வியாழன்

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஒரு நபரின் 140286 இலக்கமுடைய மோட்டார் கார் சாரதி லைசென்ஸ யாழ்ப்பாணத்தில் உள்ள வீதி ஒன்றில் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்கு சொந்தமானவர் உரிய அத்தாட்சிகள் காட்டி 'ஈழநாடு' காரியாலயத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

## பெச்சுவானுலாந்து பிரதமர் காமா

கபரோன்ஸ், மார்ச், 3

பெச்சுவானுலாந்தின் முதல் பிரதமராக திரு செரட்ஸி காமா விளங்கவிருக்கிருர், சமீபத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் 31 ஸ்தானங்களை திரு. காமாவின் "பெச்சுவானுலாந்து ஜனநாயகக்கட்சி" கைப்பற்றியது. மந்திரிசபை அமைக்குமாறு திரு. காமா கேட்கப்பட்டிருக்கிருர். இவரது மனைவி ஒரு ஆங்கிலப்பெண்.

## பாகிஸ்தானுக்கு கடனுதவி

கராச்சி, மார்ச் 3

அமெரிக்கா பாகிஸ்தானுக்கு 87 லட்சம் டாலர்கள் கடன் அளித்திருக்கிறது. யூகோஸ்லேவியா 2 கோடி டாலர் அபிவிருத்திக் கடன் வழங்கியிருக்கிறது.

## ஐயாறன் எழுதுவது

திருக்கேதீச்சரத்தில் சிவராத்திரியன்று கண்ட காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். பல மைல் தூரத்துக்கு அப்பாலிருந்தே மணிமண்டபத்திலுள்ள பிரகாசமான விளக்கு கேதீச்சரப் பெருமான் இருக்குமிடத்துக்கு வருமாறு வழி காட்டுகின்றது.

கிட்ட நெருங்க நெருங்க மின்சார விளக்குகளால் ஜோதிமயமாக விளங்கிய அப்பதி தெய்வலோகம் போல காட்சி அளித்தது. பஸ்களிலும், கார்களிலும், மாட்டுவண்டிகளிலும் நடக்தும் கணக்கற்ற பக்தர்கள் அங்குகோவில் கொண்டிருக்கும் பெருமானின் அருளைப் பெற தூய உள்ளத்துடனே வந்து கொண்டிருந்தார்கள்,

* * *

சில மாதங்களுக்கு முன் அங்கு சென்றிருக்கையில், அங்குள்ள கத்தோலிக்க வழிபடுதல விஷயமாக ஏதோ தகராறு ஏற்பட்டு மனதுக்கு வேதனை அளித்தது. இதைப் பற்றிவிசாரித்ததில், இப்போது அங்கு இதைப்பற்றிய பேச்சையே காணேம். சூறுவளி வந்தபின் இந்தப் பிரச்னையும் அடங்கியுள்ளதாம். மன்னரிலும் திருக்கேதீச்சரத்திலும் சூறுவளியால் பெருஞ் சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக அறிந்ததும் இந்தச் சூறுவளியாலும் ஒரு நன்மை ஏற்பட்டுள்ளதை உணர முடிந்தது. நடப்பதெல்லாம் நன்மைக்குந்தானே.

ஆனல் அங்கிருந்த அழகான பலபல பெரிய வேப்பமரங்களையே காணேம். பல இளம் தென்னைமரங்கள், சூறுவளியுடன் பெரும் போராட்டம் நடத்திவெற்றிபெற்றுள்ளதைக் கண்டேன். சாய்ந்த மரங்களால் இருபது டன்னுக்குமேல் விறகுகள் குவிந்துள்ளனவாம், ஏன் இந்தச் சீரழிவு! அந்த மரங்கள் யாருக்கு என்ன பாவம் செய்தன. ஒன்றும் புரியவில்லை. "மாவின் கனி தூங்கும் பொழில் மாதோட்ட நன்னகர"ாக மீண்டும் கேதீச்சரம் எப்போது திகழப் போகிறதோ?

* * *

அங்கு கண்ட காட்சிகள் எப்படி இருந்தன தெரியுமா? மணிவாசகப் பெருந்தகை பாடிய திருப்பள்ளி எழுச்சிப் பாடல்தான் நினைப்பு வந்தது. "இன்னிசை வீணையர், யாழினர் ஒருபால், இருக் கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால், துன்னிய பிணைமலர் கையினர் ஒருபால், தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால், சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்..." என்றதுபோல் ஒவ்வொரு இடத்திலும் அடியார்கள் பெருமானை வெவ்வேறுவிதமாக வழிபட்டு அவனருளைப் பெற்றனர்.

முன்னேயுள்ள பெரிய கல்யாண மண்டபத்திலே பக்திப் பாடல்கள், கூட்டுப்பிரார்த்தனை, புராணபடனம், கதாகாலட்சேபம் முதலியன மாலையிலிருந்து மறுநாள் காலை வரை தொடர்ந்து நடந்தன. கைதடியிலுள்ள குருடர் செவிடர் பாடசாலை மாணவமாணவிகள் இனிமையாகச் சேர்ந்து பாடியவை உள்ளத்தை உருக்கியது. புறப்பார்வையை இழந்துள்ள அவர்களுக்கு அகப்பார்வையை அளிக்க இறைவன் திருவுள்ளம் கொண்டார் போலும்.

* * *

மேற்கு பிரகாரத்திலே பூண் சுமந்த திருமேனியுடன் கேதீச்சரநாதன், புதிய திருவிளையாடலைச் செய்து வருகின்ருர். நான்கு ஜாமத்திலும், (இல்லை ஐந்து முறை) ஆண், பெண் பக்தர்கள் குடங்களுடனே கேதீச்சரப் பதிகங்களைப் பயபக்தியுடன் பாடிக் கொண்டே வரிசையாகப் பாலாவிக்குச் சென்று மூழ்கி, சிரசிலே தீர்த்

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தக் குடத்தைத் தாங்கி, ஈரவஸ்திரத்துடனே சிவபுராணம் பாடிக் கொண்டு, கோவிலுக்கு வந்து ஐந்தெழுத்து மந்திரமோதி, தங்கள் கையாலேயே அவருக்குப் பக்திப் பெருக்கெடுக்க, அபிஷேகம் செய்யும் காட்சி, அபூர்வக் காட்சியாகும். இதை அந்தப் போர்ச்சுகீசியரும் அவர்களைச் சேர்ந்தவர்களும் பார்க்க வேண்டும்போல எனக்குப்பட்டது!

ஆங்காங்கே மடங்களில் காலை முதல் வந்தவர்களுக்கெல்லாம் அன்னதானம். குருவளிக்குப்பின் ஒவ்வொரு நாளும் அங்கு அன்னதானம். சாதிசமய வேற்றுமைஎல்லாம் பெரிதும் மறைந்து இறைவன் அருளால் புதிய ஒற்றுமையும் சமரச உணர்ச்சியும் ஏற்பட்டுள்ளதாம்.

வெகு தூரத்திலிருந்து வந்த ஏழைகள், துணியில் முடிச்சுப் போட்டிருந்த சில சதங்களை எடுத்து கோவில் உண்டியலில் போட்ட பக்திக் காட்சிகளை வர்ணிக்க முடியாது. உண்டியலும் நிறைந்துவிட்டது! இன்னும் எவ்வளவோ எழுத வேண்டும். திருப்பணிச்சபைத் தலைவர் சேர் கந்தையா வைத்தியநாதன் அடக்கமாகக் கூறியதுபோல் எல்லாம் அவன் அருள்!

* * *

நெனிவுண்டாக்கருதாதே நிமலன்தன்னை நினைமின்கள் நித்தலும் நேரிழையாளாய, ஒளிவண்டார் கருங்குழலி உமையாள் தன்னை யொருபாகத் தமர்ந்தடியாருள்கி யேத்தத், களிவண்டார் கரும் பொழில்சூழ் கண்டல் வேலிக் கழிப்பாலை மேய கபாலப்பனர், வழியுண்டார் மாயக் குரம்பை நீங்கவழிவைத்தார்க் கவ்வழியே போதும் நாமே.

— அப்பர்சுவாமிகள்

# வடவியட்னுமில் 160 அமெரிக்க தென்வியட்னும் விமானங்கள் தாக்குதல்

## வெடிகுண்டுகளும், ராக்கெட்டுகளும் உபயோகிக்கப்பட்டன

### கடற்படைத் தளத்துக்கு பெருஞ்சேதம்

சைகோன், மார்ச் 4

**அமெரிக்க தென்வியட்னுமிய விமானங்கள் நேற்று வடவியட்னுமுக்குள் நெடுந்தூரம் ஊடுருவி இரு தாக்குதல்களை நடத்தியதாயும், தாக்குதலில் 160 விமானங்கள் பங்குபற்றின என்றும் அறிவிக்கப்பட்டது. இந்தத் தாக்குதலில் குண்டுகளுடன் ராக்கெட்டுகளும் உபயோகிக்கப்பட்டன என்றும் முக்கிய வடவியட்னும் கடற்படைத்தளம் மிகுந்த சேதத்துக்குள்ளானதென்றும் மேலும் அறிவிக்கப்பட்டது.**

சமீபத்தில் வியட்னுமின் கொரில்லாக்களுக்கு ஆயுதம் ஏற்றிச் சென்றபோது மூழ்கடிக்கப்பட்ட கப்பல் இத்தளத்திலிருந்து தாண்டி புறப்பட்டதாகக் கூறப்படுகிறது.

வடக்கு எல்லைக்கு 60 மைல்களுக்கப்பால் தாக்குதல் நடைபெற்றது. அமெரிக்க விமானங்களுடன் தென்வியட்னும் வெடிவிமானங்களும் இத்தாக்குதலில் பங்குபற்றின.

**இரண்டாம் தாக்குதல்**

இரண்டாவது தாக்குதல் லாவோஸ் எல்லைக்கு சிலமைல் தூரத்திலுள்ள வடவியட்னும் சப்ளை கிடங்குமீது நடத்தப்பட்டது. இதில் முதல் தடவையாக ஜான்பார விமானங்கள் உபயோகிக்கப்பட்டன.

இந்தத் தாக்குதல்களில் 2 அமெரிக்க விமானங்களும் 1 தென்கொரிய விமானமும் சுட்டுவீழ்த்தப்பட்டதாக அமெரிக்கத் தகவல் கூறியது. ஆனால் 7 விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாக வடவியட்னும் தகவலும் மாஸ்கோ ரேடியோ அறிவிப்பும் கூறின.

**3 வார இடைவெளி**

3 வார இடைவெளிக்குப் பின் வடவியட்னும்மீது இப்பெரும் தாக்குதல் நடத்தப்பட்டது. தென்வியட்னும் அரசாங்கமும் சைகோனிலுள்ள அமெரிக்கத் தூதரும் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையொன்றில் தாக்குதல் தொடர்ந்து நடத்தப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. இத்தாக்குதல்களுக்கு வடவியட்னும்தான் பொறுப்பு என்றும் அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

**மாஸ்கோ கண்டனம்**

அமெரிக்கத் தாக்குதல் பகிரங்க ஆக்கிரமிப்பு என்றும், இதனால் இந்தோசீன நிலைமை தீவிரமாகிவிட்டது என்றும் மாஸ்கோ ரேடியோ குற்றஞ்சாட்டியிருக்கிறது.

நேற்று வாஷிங்டனில் அமெரிக்க வெளிநாட்டு மந்திரி திரு. ரஸ்கும், அமெரிக்காவிலுள்ள ரஷ்யத் தூதரும் வியட்னும் நிலைமைபற்றிப் பேசினர். இப்பேச்சுக்கள் ஒருமணி நேரம் நடைபெற்றன.

நேற்று டில்லியில் செக்கோஸ்லேவேகிய பிரதம மந்திரி திரு. லெனுர்டுக்கு அளிக்கப்பட்ட விருந்தில் இந்தியப்பிரதமர் பேசியபோது தென்வியட்னுமில் நெருக்கடி நடவடிக்கைகள் நிறுத்தப்படவேண்டும் எனக் கூறினுர். இதே கருத்தை திரு. லெனுர்டும் வெளியிட்டார்.

## 'பேச்சுநடத்த வாய்ப்பு' —துங்கு

கோலாலம்பூர், மார்ச் 3

மலேஷியா - இந்தோனேஷியா தகராறுபற்றி பாங்காக்கில் பேச்சுநடத்த வாய்ப்பு இருப்பதாயும், இவ்விஷயமாக தாய்லந்து வெளிநாட்டு மந்திரி தம்முடன் தொடர்பு கொள்ள விருப்பதாயும் மலேஷிய பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் கூறினுர்.

---

## அமெரிக்க உதவி நிறுத்தப்படும்?

வாஷிங்டன், மார்ச் 4

இந்தோனேஷியாவுக்கு அமெரிக்க உதவியை மேலும் நிறுத்துவது பற்றி ஆலோசிக்கப்படுவதாய் அறிவிக்கப்படுகிறது. ஏற்கனவே இந்த உதவி குறிப்பிடத்தக்க அளவு குறைக்கப்பட்டபோதிலும், இன்னும் சில அம்சங்களில் அதுநீடித்து வருகிறது. தற்சமயம் இந்தோனேஷியாவில் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன.

---

## பீகிங்கில் அயூப்

பீகிங், மார்ச் 3

உலகப் பிரச்னைகள் குறித்து சீனத்தலைவர்களுடன் தாம் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவிருப்பதாயும் தென்கிழக்காசியாவில் அமைதியை ஏற்படுத்தும் வழிவகைகள் பற்றி ஆராயவிருப்பதாயும் இங்கு விஜயம் செய்துள்ள பாகிஸ்தான் ஜனதிபதி அயூப்கான் கூறினுர்.

சீன ஜனதிபதி லியூஷாசீ அளித்தவிருந்தில் பேசுகையிலேயே இவ்வாறு அவர் கூறினுர்.

---

## குரோமிகோ பாரிஸ வருவார்

மாஸ்கோ, மார்ச் 3

ரஷ்ய வெளிநாட்டு மந்திரி திரு. குரோமிகோ அடுத்த மாதம் பாரிஸ செல்வார் என டாஸ செய்தி ஸதாபனம் கூறியது. அதன்பின் பிரெஞ்சு வெளிநாட்டு மந்திரி மாஸகோ வருவார் எனவும் அறிவிக்கப்படுகிறது.

---

## இன்று கேரள தேர்தல்

புதுடில்லி, மார்ச் 3

கேரளத்தில் நாளை தேர்தல்கள் நடைபெறவிருக்கின்றன. மொத்தம் 133 சட்டசபை ஸ்தானங்களுக்கு 558 அபேட்சகர்கள் போட்டியிடுகின்றனர். 85 லட்சம் வாக்காளர்கள் கேரளத்தில் உள்ளனர்.

# 4 பொலிசார் மாண்டனர் 210 பேர் காயமடைந்தனர்

## ஹிந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்ட விளைவுபற்றி அறிக்கை

கோவை, மார்ச், 3

ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின் போது பந்தோபஸ்துக்காக பிற ராஜ்யங்களிலிருந்து தருவிக்கப்பட்ட ராணுவப் படைகளும், விசேஷ பொலிஸ் படைகளும் குறைந்தபட்சம் இன்னும் 6 மாத காலமாவது கலவரப்பகுதிகளில் இருக்க வேண்டி வரும் என சென்னை இன்ஸபெக்டர் ஜெனரல் திரு. எப். வி. அருள் கூறினுர்.

"பொலிஸ்காரர்களின் எண்ணிக்கை போதுமான அளவு இல்லாததால், இவ்வாறு ஏற்பாடு செய்வது அவசியமாகிவிட்டது. பிற ராஜ்யப்படையினர் கலவரம் அதிகமாகப் பரவியிருந்த இடங்களில் இருப்பார்கள்" என்றும் அவர் கூறினுர்.

"கேரளம், மைசூர், மத்திய பிரதேசம், ஆந்திரா, மகாராஷ்டிரம் முதலிய ராஜ்யங்களிலிருந்து பொலிஸ படைகள் தருவிக்கப்பட்டன. மத்திய அரசாங்க ரிசர்வ் பொலிஸ் படையும் வந்திருந்தது.

இப்போது ராஜ்யத்தில் சட்டபரிபாலன அமைதி நிலவரம் சகஜமாக இருக்கிறது என்றும் அவர் கூறினுர்.

"ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின்போது 2 சப்-இன்ஸபெக்டர்கள், ஒரு ஹெட் கான்ஸ்டபிள், ஒரு கான்ஸ்டபிள் ஆகிய நால்வர் மாண்டனர் எனறும், சுமார் 210 பொலிஸ்காரர்கள் காயமடைந்தனர் என்றும் திரு அருள் கூறினுர்.

திட்டவட்டமான வழக்குகளுக்கு மட்டும் இதுவரை ராஜ்யம் பூராவிலும் 1000 பேருக்கு மேல் கைது செய்யப்பட்டிருப்பதாயும் அவர் கூறினுர்.

# மாஸ்கோ மகாநாடு பற்றி சீனு தொடர்ந்து தாக்குதல்

மாஸ்கோ, மார்ச். 3

19 நாட்டு கம்யூனிஸ்ட்கட்சிகளின் மகாநாடு இன்றும் தொடர்ந்து நடைபெறுகிறது.

நேற்றே முடிவடையவிருந்த இந்த மகாநாட்டை இன்றும் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

மகாநாட்டின் அலுவல்கள் பற்றி அறிக்கை எதுவும் வெளியிடப்படவில்லை.

அதே சமயம் சீனரேடியோ, சீனப்பத்திரிகைகள் ஆகியன ரஷ்யத் தலைவர்களைத் தொடர்ந்து தாக்கி வருகின்றன. எனினும் ரஷ்யா, இச்சமயம் இவ்விஷயத்தில் மௌனமாய் இருக்க வேண்டும் என மகாநாட்டுப் பிரதிநிதிகளைக் கேட்டுக் கொண்டிருக்கின்றது.

# ஹிந்திதான் தொடர்பு மொழியாக இருக்கமுடியும் — சாஸ்திரி

புதுடில்லி, மார்ச், 3

மொழிப் பிரச்னை பற்றி தேசிய நோக்குடனும் நீண்டகால அடிப்படையுடனும் பரிசீலிக்கப்படவேண்டும் என பிரதமர் திரு. சாஸ்திரி கூறினுர்.

நேருவின் உறுதிமொழி நிபந்தனையின்றி நிறைவேற்றப்படும் என்றும், ஆட்சிமொழித் திட்டம், மும்மொழித்திட்டம், சகல பிரதேச மொழிகளுக்கும் அகில பாரத பரீட்சை மொழி அந்தஸ்து, மத்திய அரசாங்கத்தில் வேலைவாய்ப்பு ஆகிய சகல அம்சங்களும் கவனமாக ஆராயப்பட வேண்டும் என்றும் திரு. சாஸ்திரி கூறினுர்.

தொடர்பு மொழி ஒன்று இருக்க வேண்டுமானுல் அது ஹிந்தியாகத்தான் இருக்க முடியும் என்று கூறிய பிரதமர், எனினும் விரும்பியவரை ஆங்கிலத்தை உபயோகிப்பதில் தடைஎதுவும் இல்லை என்றும் கூறினுர்.

தமிழ் நாட்டில் கலவரங்களில் ஈடுபட்ட மாணவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க வேண்டியதுதான் என்றும், ஆனுல் திடும் என மாணவர்கள் எதுவும் செய்யும் இயல்பு இருப்பதால் இவ்விஷயம் சற்று தாராளப் போக்குடன் கவனிக்கப்படும் என்றும் சாஸ்திரி கூறினுர்.

தேச ஒற்றுமையேதற்போது தேவை என்றும் பிரதமர் கூறினுர்.

---

## சாஸ்திரி விஜயம்

புதுடில்லி, மார்ச் 3

அமெரிக்காவுக்கும், ரஷ்யாவுக்கும் நாம் மேற்கொள்ளவிருக்கும் விஜயத்திற்கான திகதி இன்னும் முடிவாகவில்லை என பிரதம மந்திரி திரு சாஸ்திரி ராஜ்ய சபையில் அறிவித்தார்.

# "உரிமை பெறும்வரை போராட்டம் ஓயாது"

## கல்முனையில் நவரத்தினம்

கல்முனை, புதன்

"கடந்த 15 வருடகாலமாக தமிழரசுக் கட்சி தமிழர்களுக்காக போராடியது போல வேறு எந்தக் கட்சியும் போராடவில்லை, இனிமேலும் எங்கள் போராட்டம் நின்று விடப்போவதில்லை, நாங்கள் தமிழரசு பெறும்வரை எங்கள் போராட்டம் நடைபெற்றுக் கொண்டேயிருக்கும். எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபோதிலும் தமிழரசுக் கட்சியினரின் ஒத்துழைப்பின்றி நிம்மதியாக ஆட்சிபுரிய முடியாது".

இவ்வாறு கல்முனைத் தொகுதியில் போட்டியிடும் தமிழரசுக் கட்சி அபேட்சகர் ஜனப் மஷூர் மௌலானுவை ஆதரித்து நீலாவணையில் நடைபெற்ற கூட்டத்தில் ஊர்காவற்துறை முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. நவரத்தினம் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:

"எங்கள் கட்சி சாதி, சமயம் பாராது தமிழினம் வாழ வேண்டும் என்ற கொள்கையுடன் செயல்படும் தனிப்பெரும் கட்சியாகும். தமிழரசுக் கட்சியின் மூலமாகவேதான் எவரும் கல்முனைத் தொகுதியிலிருந்து பாராளுமன்றம் போகலாமே தவிர சுயேட்சையாகவோ அல்லது வேறு எந்தக் கட்சி மூலமாகவோ பாராளுமன்ற பிரதிநிதியாக போகமுடியாது என்பதை கடந்த கால தேர்தல்களில் நீங்கள் நிரூபித்து விட்டீர்கள். எனவே சென்ற முறை தமிழரசுக்கட்சியின் மூலமாக தேர்தலில் நின்றவர் இம்முறை கட்டாயம் தோல்வி அடைவார் என்பதை நான் சொல்லுமுன்பேயே நீங்கள் செயலில் காட்ட முன் வந்துவிட்டீர்கள். இம்முறை தமிழரசுக்கட்சியை தேர்ந்தெடுத்து அனுப்புவீர்களாயின் நீங்கள் கல்முனைத் தொகுதிக்கு மட்டுமல்ல இலங்கையிலுள்ள தமிழ் பேசும் இனத்திற்கே பெரும் நன்மை செய்தவர்களாவீர்கள். நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து விரைவில் தமிழரசு நிறுவோம் என்பதில் ஐயமில்லை".

## வீடு தீக்கிரை

### குழந்தைகள் படுகாயம்

பளை, புதன்

முகமாலை என்னும் கிராமத்தை சேர்ந்த பாக்கியவதி தோட்டத்தில் வசித்து வந்த தொழிலாளியாகிய வைத்திலிங்கம் நடராசா என்பவரது வீடு தீக்கிரையான பரிதாப சம்பவம் இங்கு நடைபெற்றுள்ளது. நடராசாவின் மனைவி வள்ளி பிள்ளை தன் 4 வயது குழந்தையையும், 5 மாதக் குழந்தையையும் சமையலறையில் இருக்க வைத்துவிட்டு கிணற்றில் நீர் எடுக்கச் சென்றபோது தற்செயலாக நடைபெற்ற இத்தீவிபத்தில் அவ்விரு குழந்தைகளும் தீயினுல் படுகாயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இது குறித்து பளை பொலிஸார் விசாரணை நடத்தினர், விசாரணையின் போது தற்செயலாக நடந்த தீவிபத்து என தெரிவிக்கப்பட்டது.

---

## "பிரதமரின் பதவிக்காலம்"

நீர்கொழும்பு, புதன்

"மார்ச் மாதம் 22-ம் திகதி வரை மட்டுமே திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பிரதமராகவிருக்க முடியும்" என்று நீர்கொழும்பில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார கூட்டமொன்றில் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன பேசுகையில் கூறினுர்.

"கூட்டரசாங்கம் மீண்டும் பதவிக்கு வந்தால் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அகற்றப்பட்டு டாக்டர் என். எம். பெரேரா பிரதமராக வருவார்" என்றும் திரு ஜயவர்த்தன கூறினுர்.

---

## 2-ம் டெஸ்ட்

கல்கத்தா, மார்ச் 3

இந்தியாவுக்கும் நியூஸிலந்துக்குமிடையே இரண்டாவது கிரிக்கெட் டெஸட் வருகிற வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிறது.

# 'நாட்டுக்கு பலநன்மை செய்தவன் நானே'

## பலாங்கொடையில் சி. பீ. டி. சில்வா

பலாங்கொடை, புதன்

"நாட்டின் நலனுக்கு நான் மற்றைய மந்திரிகளிலும், பிரதமரிலும் பார்க்க அதிக சேவை யாற்றியுள்ளேன்" என்று பலாங்கொடையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் பேசுகையில் திரு. சி. பீ. டி. சில்வா குறிப்பிட்டார்.

"அரசாங்கத்தில் மார்க்ஸிய வாதிகள் நுழைந்ததும் உண்மையான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக் கொள்கைகள்மறைந்து விட்டன. கடந்த டிசம்பர் மாதம் மூன்றும் திகதி, பின்புற வாசலை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் மூடினர்-நாங்கள் மூடிவிட்டோம்" என்றும் திரு. சி. பீ. டி. சில்வா குறிப்பிட்டார்.

"முன் கதவு திறக்கப்பட்டிருக்கிறது. மக்கள் ஏற்றுக் கொண்டால் மார்க்ஸியவாதிகள் முன்புற வாசலால் வரலாம் என்று கூறிய திரு. சி. பீ. டி. சில்வா, சில மந்திரிகளுக்கு எதிராக லஞ்சக்குற்றச்சாட்டுகள் இருக்கின்றன என்றும் தாங்கள் ஒருமுறை பதவிக்கு வந்தால் இக்குற்றச் சாட்டுகளை வெளிப்படையாக விசாரிப்போம்" என்றும் தெரிவித்தார்.

# "எமது சுதந்திரத்தை பறிகொடுக்க முடியாது"

— பிலிப்

களிகமுவ, புதன்.

"இந்த நாட்டுக்கு நாம் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தது வேறு ஒரு நாட்டுக்கு இதை விற்கவல்ல ரஷ்யாவுக்கோ, சீனாவுக்கோ அல்லது அமெரிக்காவுக்கு எமது சுதந்திரத்தை நாம் பறிகொடுக்க முடியாது" என்று களிகமுவ சந்தியில் நடைபெற்ற கூட்டமொன்றில் மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் திரு. பிலிப் குணவர்த்தன பேசுகையில் கூறினர்.

"நாட்டின் முன்னேற்றத்துக்கு கூட்டரசாங்கம் ஒன்றும் செய்யாத காரணத்தால் தான் கூட்டாட்சி கடந்த டிசம்பரில் வீழ்ச்சியடைந்தது. சகலதையும் கூட்டரசாங்கம் குழப்பி அடித்திருக்கிறது. உருப்படியாக இது என்ன செய்ததென்றால், நிதி மந்திரிகளை மட்டும் மாற்றியிருப்பதே" என்றும் திரு. பிலிப்குணவர்த்தன கூறினர்.

டிசம்பர் 8-ம் திகதி முறியடிக்கப்பட்ட கூட்டரசாங்கம் மார்ச் 22-ம் திகதியும் வீழ்த்தப்படும் என்று கூறிய திரு. பிலிப் குணவர்த்தன, மக்கள் ஐக்கிய முன்னணியின் பதவி காலத்தில், நாட்டு மக்களுக்கு பல நல்ல சேவைகள் அளிக்கப்பட்டிருக்கிறதென்றும் தெரிவித்தார்.


ஸ்ரீ மனோகரா (யாழ்ப்பாணம் போன்) 485
ஹொன்னப்பா பாகவதர்
பி. சரோஜாதேவி
நிறம்பட நடித்த
மஹாகவி காளிதாஸ்

REGAL — JAFFNA
NOW SHOWING
Nancy Kwan
in
FLOWER DRUM SONG
(Cinemascope - Color)



இன்றோழுது திரையிடப்படுகிறது!

சிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
ராஜ் (கீர்கொழும்பு) விஜயா (மட்டக்களப்பு) விஜிதா (ஹட்டன்)
கல்யாணி (நாவலபிட்டி) மொடேர்ன் (பதுளை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணம் வெலிங்டனில்
தினசரி பி. ப 6-30, 10-00. சனி, ஞாயிறு காலை 10-30, பி ப 2-30 6-30, 10-00
ஜெமினி கணேசன் — சாவித்திரி (நடித்த)
கற்பகம்


# ஒரே நாளில் 16 கூட்டங்கள்

கல்முனை, புதன்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போட்டியிடும் சட்சிகளுள் தமிழரசுக் கட்சியினர் கிழக்கு மாகாணத்தில் ஒரே நாளில் 16 தேர்தல் பிரசாரக் கூட்டங்களை நடத்தியுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் வேறு எந்தக் கட்சியும் ஒரே நாளில் இவ்வளவு தொகையான கூட்டங்களை இதுவரை நடத்தவில்லையென்பது இங்கு குறிப்பிடத்தக்கது

ஒரே நாளில் 16 கூட்டங்களை நடத்திய தேர்தல் பிரசாரக் குழுவில் திரு. எஸ். ஜே. வி செல்வநாயகம், திரு. அ. அமிர்தலிங்கம், திரு. மச. இராசதுரை ஆகியோர் அங்கம் வகித்தனர்.

# சமாஜத்துக்கு அதிக லாபம்

பருத்தித்துறை, புதன்

கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத்துக்கு கடந்த ஆண்டில் சுத்தலாபமாகரூபா 25,182சதம் 78 கிடைத்திருப்பதாக அதன் வருடாந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

திரு ச. பொன்னையா தலைமையில் நடைபெற்ற மேற்படி வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்கு கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. மு. மதிபாலசிங்கமும் சமூகமளித்து ஆலோசனைகள் வழங்கினுர்.

# க்ஷயரோக கூட்டம்

பருத்தித்துறை, புதன்

இலங்கை க்ஷயரோக நிவாரண தேசிய சங்கத்தின் வடமராட்சிக் கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இம்மாதம் 6ம் திகதியன்று நடைபெறவிருக்கின்றது.

புலோலி ஆண்கள் ஆங்கில பாடசாலை மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் மாவட்ட நீதிபதி திரு. எம். எம். அப்துல்காதர், டாக்டர் ஏ. வி. ஜீவநாயகம், முகாந்திரம் ச. பி இராசையா முதலான பலர் பிரதம பேச்சாளர்களாகக் கலந்துகொள்வார்களென அறிவிக்கப்பட்டுள்ளது.

# நாவற்குழி கொலைவழக்கு

சாவகச்சேரி, செவ்வாய்

இன்று காலை மீண்டும் சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் நீதிபதி திரு. ஜெபேர்ட் சில்வா முன்னிலையில் நாவற்குழி கொலைவழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

இவ்வழக்கில் நாவற்குழியைச் சேர்ந்த நாகநாதர் பொன்னையா என்பவரைக் கொலை செய்ததாக அதே ஊரைச் சேர்ந்த பொன்னையா மீது சாவகச்சேரிப் பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பொலிசார் சாட்சியமளித்த பின் நீதிபதி வழக்கை இம்மாதம் 9-ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

எதிரிகள் சார்பில் திரு. வி, செல்லத்தம்பியின் உதவியுடன் வழக்கறிஞர் திரு சீ. கணேசலிங்கம் ஆஜரானுர்.

# தியாகிகளுக்கு அஞ்சலி

சாவகச்சேரி, புதன்

தென்மராட்சி இளந்தமிழர் மன்றக் கைதடிக் கிளையின் பொதுக்கூட்டம் திரு. ஆ. கந்தையாவின் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் தமிழகத்தில் நடைபெற்ற மொழிக் கிளர்ச்சியின்போது உயிரிழந்தவர்களுக்கு அனுதாபம் தெரிவித்து தீர்மானம் ஒன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

# "மக்கள் பட்டினி மந்திரிகள் முன்னேற்றம்"

— ஐ. தே. க. அபேட்சகர்

அனுராதபுரம், புதன்

"கூட்டரசாங்கத்தில் மந்திரிகள் 'முன்னேறுகிறுர்களே' தவிர மக்கள் முன்னேற்றமடையவில்லை, ஸ்ரீமா அரசாங்கத்தில் இன்று ஒரு போத்தல் தேங்காய் எண்ணையின் விலை ஒரு ரூபா இருபதுசதமாகவிருக்கிறது' என்று ஹொறவபொத்தானை முன்னுள் எம். பி, யும் ஐக்கிய தேசிய கட்சி அபேட்சகருமான திரு ஈ, எல். பீ. ஹூருளே இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினுர்.

மக்கள் பட்டினியாகக் கிடந்து வாடுகின்றுர்கள். ஆனல் கூட்டரசாங்க மந்திரிகள் சொந்தமாக ஆலைகளும் தோட்டங்களும் வீடுகளும் அமைத்துக்கொண்டு பல விதத்திலும் முன்னேறுகின்றனர்.

"சோஷலிஸம்என்று பேசித்திரியும் பிரதமரிடம் கூட ஏராளமான காணிகள் இருக்கின்றன" என்றும் அவர் கூறினுர்.

"இத்தேர்தலில் செலவிடுவதற்காக லட்சக்கணக்கான பணத்தை சீன அரசாங்கம் கூட்டரசாங்கத்துக்கு வழங்கியுள்ளது. திபெத்தின் நிலைமை இங்கு ஏற்படாதவாறு பொதுமக்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். என்றும் திரு. ஹூருளே கூறினுர்.

"திருமதி பண்டாரநாயக்கா சீனவுக்கு சென்றிருக்கிறுர், அங்கு அவரை திரு சூ-என்-லாய் கௌரவமாகவும் கவனித்திருக்கிறுர். இங்கு சீனர்களை நடமாட அனுமதிப்பது போல, அங்கு இலங்கையில் நடமா அனுமதிக்கப்படுவார்களா? என்றும் அவர் கேட்டார்.

# "குழந்தைகளின் கல்வியில் அதிக முன்னேற்றம்"

## ஸ்ரீமா அரசாங்கமே காரணம் என்கிறுர் கலுகெல்லே

யட்டிகொட, புதன்

"இந்த நாட்டுக் குழந்தைகள் என்னுடையது. அவர்கள்மீதுள்ள பொறுப்புகள் என்னை மட்டுமே சாரும்" என்று யட்டிகொட வித்தியாசாலையின் புதிய கட்டிடமொன்றை திறந்து வைத்துப் பேசுகையில் கல்விமந்திரி திரு. பி. பீ. ஜீ. கலுகல்லே கூறினுர்.

"கல்விமந்திரியாக நான் பதவியேற்ற பின்னர் கிராமப்புறங்களில் ஏராளமான பாடசாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மற்றவர்களைப் பார்க்க 4 மடங்கு அதிகவேலைகள் நான் செய்திருக்கின்றேன்" என்றும் அவர் தெரிவித்தார்.

"குழந்தைகள்மீது அதிக அன்பு கொண்ட அரசாங்கம் ஸ்ரீமா அரசாங்கம் ஒன்றே என்பதை நான் வெளிப்படையாகக் கூறமுடியும். நான் கல்விமந்திரியாகப் பதவியேற்றதும், எனது மனம் கஷ்டமுறும் குழந்தைகளையே நாடியது. அவர்களுக்கு திறமையான கல்வி வசதி அளித்து அவர்களை முன்னேற்ற வேண்டுமென்று நான் உறுதிகொண்டேன். ஆங்கிலத்தின் இடத்துக்கு சிங்களத்தைப் புகுத்தி. சிங்கள மொழிக்கு உரித்தான இடத்தை வழங்க வேண்டுமென்று உத்தரவிட்ட மந்திரி நான் ஒருவனே" என்றும் அவர் கூறினுர்.

# மாத்தளை கூட்டத்தில் அமளி துமளி

## முன்னுள் எம். பி.யும் மூவரும் கைதாகி பிணையில் விடுதலை

மாத்தளை, புதன்

மாத்தளை முன்னுள் எம். பி. திரு ஏ. அலுவிகாரையும் மற்றும் மூவரும் பொலிஸாரினுல் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். கைதான மூவரும் திரு. அலுவிகாரைக்கு சொந்தமானவர்கள் எனச்சொல்லப்படுகிறது.

மாத்தளையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அபேட்சகராகப் போட்டியிடுபவரை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில் கல்லெறிகளுடம் அமளிதுமளி ஏற்பட்டதைத் தொடர்ந்தே இவர்கள் கைதுசெய்யப்பட்டதாக கூறப்படுகிறது.

குறிப்பிட்ட கூட்டத்தில் செனட்டர் ஏ. ஆர். எம். ஹமீம் பேசிக்கொண்டிருக்கையில் கூட்டத்தினர்கள் சிலர்

(5-ம் பக்கம் பார்க்க)


ரெமி பொரேட்டட் டல்கம் பவுடர்




ரெமி பவுடரைப் பாவித்திருக்கிறீர்களா? சிறந்த பவுடருக்கு இணையான இந்த உயர்ந்த பவுடர் - வெகு நியாயமான விலைகளில் கிடைக்கும்; அதி உன்னத மூலப் பொருட்களினுல் ஆக்கப்பட்ட ரெமி மிக லளிதமாக வாசனையூட்டப் பட்டுள்ளது; உங்கள் வியாபாரிகளிடத்தில் 2 சைஸ் டின்களில் கிடைக்கும்

ஆவ்ரா அன் கம்பனி,
19, செட்டியார் தெரு, கொழும்பு.
போன்: 7211, 7212

# வேலை வேண்டுமா?

கொழும்பு, புதன்

பால் சபையிடமிருந்து சிருப்பர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மனுக்கள் மார்ச் 15-ம் திகதிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும். முழு விபரங்களும் 28-ம் திகதி பெப்ரவரியில் வெளியான வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

●

தொலைபேசி உதவிப் பெண் பார்வையாளர் (தமிழ்) பதவிக்கு விவாகமாகாத பெண்களிடமிருந்து தபால் தந்தி இலாகா விண்ணப்பங்கள் கோருகின்றது. முழுவிபரங்களும் 28-ம் திகதி பெப்ரவரி வெளியான வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

●

இலங்கை போக்குவரத்துச் சபையினரால் போதனை ஆசிரியர், தொலைபேசி இன்ஸ்பெக்டர் முதலிய இடங்களுக்கும் இன்னும் வேறு பல பதவிகளுக்கும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விபரங்கள் யாவும் பெப்ரவரி மாதம் வெளியான வர்த்தமானியில் கொடுக்கப்பட்டுள்ளன.

●

அரசினர் இன்ஜினியரிங் கூட்டு ஸ்தாபனம், இலங்கை முன்பகுதி கூட்டு ஸ்தாபனம், ஆயுர்வேத வைத்தியசபை, இலங்கை பெட்ரோலியம் கூட்டுஸ்தாபனம் முதலிய இடங்களிலுள்ள காலியான இடங்களுக்கும் மனுக்கள் கோரப்படுகின்றன. விபரங்கள் யாவும் 28-ந் திகதி பெப்ரவரி மாதம் வெளியான வர்த்தமானியில் கொடுக்கப்பட்டுள்ளன.

●

## உயர்கல்வி வசதிகள்

உதவிச்சம்பளம் பெற்று மேலபடிப்பு படிப்பதற்கு மனுக்கள் இந்திய அரசாங்கத்தினால் கோரப்படுகின்றன. வீட்டுப் பணி, வைத்தியம், பொறியியல் தொழில்நுட்ப கல்வி, சிற்பஇயல் முதலிய துறைகளிலே தெரிவு செய்யப்பட்ட மனுதாரர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். அரசாங்க உத்தியோகத்தராக இருந்தால் அவர் சிங்களத்தில் எட்டாம் வகுப்பிற்குரிய தகுதியுடையவர் என்று ஆதாரங்கள் காட்ட வேண்டி நேரிடும். இதையொட்டிய முழு விபரங்களும் 28-ம் திகதி பெப்ரவரி மாதம் வெளிவந்த வர்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

●

சாம்ராஜ்ய நாடுகளுக்கான உதவிச் சம்பளம் பெற்று படிப்பதற்குரிய விண்ணப்பங்களை பாகிஸ்தான் அரசாங்கம் கோருகின்றது. இஸ்லாமியகல்வி, உருது, கமத்தொழில், அராபி, பொதுக்கல்வி, பூமிசாஸ்திரம், புவியியல் முதலிய துறைகளிலேயே மனுதாரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். இதன் முழுவிபரங்களும் 28-ந் திகதி பெப்ரவரி மாதம் வெளியான வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### வியாழன் 4-3-65

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை. 7-00 துதிப் பாடல்கள், 7-15 செய்திகள், 7-25 அறிவிப்புகள், 7-30 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 திரைகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர் மன்றம், 5-45 திரை இசை.

இரவு 6-00 செய்திகள், 6-15 கிராமசஞ்சிகை, 6-45 இசைப்பயிற்சி, 7-00 பேச்சு — மகாகவி மகாலிங்கசிவம், ஆர். சுந்தரராஜசர்மா, 7-15 வயலின் — ஞானாம்பிகை முருகேசம்பிள்ளை, 7-45 நாடகம் — "லண்டன்தந்தையார்". 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி 8-45 இஸ்லாமியகீதங்கள், 9-00 செய்திகள், 9-10 அறிவிப்புகள், 9-30 நேயர்விருப்பம், 10-00 நிஜய ஒலிப்பதிவுகள்.

## மாத்தளை...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சத்தமிட்டனர் என்றும் அவர்களை செனட்டர் தாக்கிப்பேசியதைத் தொடர்ந்து மேடையிலிருந்தவர்கள் மீது கல்மாரி பொழியப் பட்டதென்றும் பொலிஸார் வந்து நிலைமையைக் கட்டுப்படுத்தினரென்றும் அறியப்படுகிறது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் பொருட்டு பிரதமர் வருவதற்கு 90 நிமிடங்களுக்கு முன்னரே இச்சம்பவங்கள் நிகழ்ந்ததாம்.

## மல்லிக்கு தட்டுப்பாடு

சாவகச்சேரி, புதன்

கடந்த சில வாரங்களாக இங்கு கொத்தமல்லிக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சேமித்து வைத்திருக்கின்ற தனிப்பட்ட வியாபாரிகள் சிலர் இரண்டு பங்கு கூடுதலான விலைக்கு விற்கின்றனர்.


போன்: 7099

இருப்புஎடுக்கும்
மலிவு
விற்பனை

ரொலறம்ஸ்

46,
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

உயர்ந்த ரகம், உன்னத சேவை,
வேண்டிய தினுசுகளை
ஒரே முறையில் தேர்ந்து எடுக்க
ஒரே ஸ்தாபனம்

ரொலறம்ஸ்


ஆசிரியருக்குக் கடிதங்கள்

## சமஷ்டி ஆட்சி

எந்தவொரு இனமும் சில வருடங்களில் சுதந்திரம்பெற்று விட்டதாக சரித்திரமேஇல்லை. தமிழர்கள் சுதந்திரம் பெற வேண்டுமானால் பல வருடகாலப் போராட்டம் அவசியம் தமிழர்கள் இப்பேயிருக்கும் நிலைமையில் அந்தப் போராட்டம் அஹிம்சை முறையிலேயே நடக்கவேண்டும். மேலும் தமிழரசுக் கட்சி கேட்கும் சமஷ்டி இந்திய சமஷ்டியிலும் பார்க்க வேறுனது அவர்கள் கேட்கும் சமஷ்டியாட்சியில் மத்திய அரசாங்கத்தில் தமிழும் சிங்களமும் ஆட்சி மொழியாயிருக்க வேண்டும், இலங்கையில் இவ்வாறு செய்வது சுலபமானது ஆனல், இந்தியாவிலே B பாஷைகளையும் அரசாங்க மொழியாக்குவது கடினமானது எனவே தான் அன்னிய மொழியாயிருப்பினும் ஆங்கிலத்தை இணைமொழியாக தொடர்ந்து வைத்திருக்கும்படி தமிழ்நாட்டவர்கள் கேட்கிறுர்கள் இவ்வாறு செய்யின் பிரதேச மொழிகளும் புறக்கணிக்கப்படமாட்டாது இலங்கையில் இரு மொழிகளையும் இப்போதிருக்கும் நிலையிலேயே அரசாங்க மொழியாக்கலாம் அதற்கு சமஷ்டி ஆட்சி தேவையில்லையே என்று சிலர் வினவக்கூடும். தமிழர்களுடைய பிரதேசம் பறிபோகாமல் தடுக்கவே சமஷ்டியரசை கேட்கிறது தமிழரசுக்கட்சி.

ச. ஆனந்தன்

காரைநகர்.

●

## பிரயாண சீர்கேடு

மூதூர்ப் பகுதியில் ஆறு பஸ் வண்டிகள் தான் பிரயாண சேவையாற்றி வருகின்றன இந்த ஆறு பஸ்களையும் வைத்துக்கொண்டு நேர ஒசிப்படி பிரயாணம் செய்வது முற்றிலும் கஷ்டமாக இருக்கின்றது இதற்கு பஸ் பற்றாக்குறையுடன் சேர்ந்து வீதி ஒழுங்கு சீர்கேடும் காரணமாகும்.

குறிப்பாகத் தோப்பூர் சந்தியில் இருந்து கிளிவெட்டிவரையுள்ள பிரதான ரஸ்தாவின் ஓரங்களில், கற்குவியல்கள் நீண்டகாலமாகக் கொட்டியபடியே இருப்பதினால் அவைகளின் மேல புல்வளர்ந்துமூடி வீதியையும் மூடக்கூடியவரையிலுள்ளது. இதனால் இரண்டு பஸ் வண்டிகள் ஒன்றை ஒன்று விலத்திக் கொள்ளமுடியாத நிலையில் ஓர் பஸ் மட்டுமே ஓடக்கூடியதாகப் பாதையின் அகலம் குறுகியுள்ளது. திருக்கோணமலை—மூதூர் கரைமார்க்கப்பாதையைத் திருத்தம் செய்து கொடுத்தால் மக்கள் முன்புபோல் என்றும் சந்தோஷமாகப் பஸவண்டிகளில் பிரயாணம் செய்யமுடியும்.

—அ. இ. செ.

மூதூர்.

●

## பொதுத்தேர்தல்

தென் இலங்கையில் ஆட்சி பீடமேறும் போட்டியில் நிற்பது ஐ. தே. கட்சியும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுமாகும் இந்த சந்தர்ப்பத்தில் பல தொகுதிகளில் தமிழருடைய வாக்கு பலத்தால் தான் எந்தக் கட்சிப் பிரதிநிதியும் தெரிவு செய்யப்படுவார்கள். ஆகவே தமிழ் வாக்காளர் தங்களுடைய வாக்கை பிரயோகிக்கும் பொழுதுஉணர்ச்சிக்கு இடம் கொடுக்காமல் கடந்த கால சம்பவத்தை நன்கு ஆராய்ந்து பார்க்க வேண்டும். எங்களுக்கு ஐ. தே. கட்சியும் ஒன்றுதான், ஸ்ரீலங்கா கட்சியும் ஒன்றுதான் என்ற கருத்து ஏற்கக் கூடிய தொன்றல்ல.

தமிழன் பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றம் தடுக்கப் படவேண்டும். சுவர் இருந்தால்தான் சித்திரம் எழுதலாம் என்பதைப் போல தமிழ் நாடு இருந்தால் தான் தமிழுரிமை கோரி போராடலாம். ஆகவே மொழிப் போராட்டத்திலும் பார்க்க குடியேற்றப் பிரச்சனைதான் முக்கியமானது. ஐ. தே. கட்சி 1952—56 ஆண்டுகளில் 6000 சிங்கள மக்களை குடியேற்றியதென்றும் அதன் பின்பு வந்த ஸ்ரீலங்கா கட்சி குடியேற்றத்தில் அக்கறை செலுத்தாமல் விட்டது குறித்து பலத்த கண்டனம் தெரிவித்தும் கல்லோயாவில் 25000 மக்களை குடியேற்றுவது தான் தங்கள் எண்ணம் என்று ஐயத்துக்கிடமின்றி கூறியுள்ளது. ஆகவே திரு. டட்லி சருகும் 25,000 மக்களும் சிங்கள மக்கள் தானே. ஏனெனில் முன்பு குடியேறிய 6000 மக்களும் சிங்கள பிரயாலும் ... அவர் இப்பொழுது குடியேற்றப் போகும் மக்களும் சிங்களவரேயாகும். அத்துடன் திரு. டட்லி, தங்கள் கட்சி அதிகாரத்துக்கு வந்தால் ஸ்ரீலங்கா கட்சி செய்யாது விட்ட குடியேற்றத்தை தீவிரப்படுத்துவோம் என்று உறுதி கூறியுள்ளார்.

தென்னிலங்கையிலுள்ள தமிழ்மக்கள் எல்லோரும் கிழக்கு மாகாணம் சிங்கள மயமாகுவதை தடுக்க ஐ. தே. கட்சியை தோற்கடிக்க வேண்டும். குடியேற்றப் பிரச்சினையை எடுத்தால் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கம் ஐ. தே. கட்சி அரசாங்கத்தை போல் எங்கும் திட்டமிட்டு குடியேற்றி சிறுபான்மையான தமிழ் மக்களை மேலும் சிறுபான்மையாக்கவில்லை.

—ஈஸ்வரன்

காரைநகர்

## தேர்தல் பிரசாரக் குழு

யாழ்ப்பாணம், வியா.

இம்மாதம் 5-ந் திகதிதொடக்கம் பதினொராம் திகதிவரை தமிழரசு வாலிப முன்னணி தேர்தல் பிரசாரக்குழு ஒன்று மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுமென கூறப்படுகிறது. இந்தக் குழுவில் எட்டு வாலிப முன்னணியினர் அங்கம் வகிப்பர்.

### NOTICE

In the District Court of Jafina

1 Velupillai Sinniah and wife.

2. Thankamalar both of Manipay.

No. P/ 482 vs. Plaintiffs

1. Vathiresu Vallipuram
2. Periathamby Vallipuram both of Thyiddy.
3. Muthiah Selvanayagam and wife.

5 Sinnachchippillai both of Sandilippay

5 Moothathamby Arunasalam and wife

6. Ponnammah both of Thyiddy Presently of Medical Department Kula Pila Maleya

7 Sinniah Nadarajah and wife

8. Thailnayaki both of 129/38, Jampetnah Street colombo

9 Vallipuram Navaratnasingam of Thyiddy

10 P Sinnathurai of Karukkuwa Estate, Madampe.

Defendants

To: The Village Headman of Thyiddy

It is hereby notified that action No P/ 482 has been instituted in the District Court of Jaffna under the partition act No 16 of 1951 for the partition / sale of the land / lands called Thulai or Thulaikkaladdy and situated Thyiddy.

The defendants in the aforesaid action are summoned to appear in Court on the 18th day of January 1962 at 10 O'clock of the forenoon and now extended to 24th September 1964 and further extended to 4-3-65

By order of Court

Sgd A J Antonipillai

This 18th day of July 1961

Secretary / Chief Cleak 1646


வரி விளம்பரம்

### தையல் வகுப்பு

மெசின் தையல் பயிற்சி வகுப்பில் சேர விரும்பும் மாணவிகள் கீழ்கண்ட விலாசத்திற்கு 10-3-65 க்கு முன் விண்ணப்பிக்கவும். விடுதி வசதிகள் அளிக்கப்படும், விபரம் நேரில் செல்வி, ப. இராமலிங்கம், பூதர்மடத்தடி, கோப்பாய். 1753

### விற்பனைக்கு

எங்கள் தயாரிப்பிலுள்ள "டோச்" மார்க் அலுமினியப் பாத்திரங்கள் குறைந்த விலையில் எம்மிடம் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம்.

எவர்சில்வர் மாளிகை, 241, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 1743

B S A 35 H P. மோட்டார் சயிக்கிள் இலக்கம் EN 2525 உடன் விற்பனைக்கு, விலாசம்: S விஜயமூர்த்தி, 43/1 A, கல்லூரி ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணம். 1752

### தேவை

அலுமினியத் தொழிற்சாலையில் வேலை செய்வதற்கு, சகலவித அலுமினியப் பாத்திரங்களும் செய்யக் கூடிய ஆள் "ஸ்பின்னேஸ்" (Spinners) தேவை. வேலைக்கு ஏற்றபடி சம்பளம் வழங்கப்படும். 15-3 65ந் திகதி 4 பிற்பகல்மணி வரைமனுப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். (நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும்) விலாசம்:-

மனேஜர், பேன் உலோகத் தொழிற்சாலை, இல. 60, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 1755

பிடவை வியாபாரத்தில் தேர்ச்சி பெற்ற ஃசல்ஸ்மன் தேவை, வயது 20-30 க்குள் விரும்பத்தக்கது. உத்தரவாதத்துடன் 8-3-65 க்கு முன்பாக நேரில் சந்திக்கவும். லைலண்டன், யாழ்ப்பாணம். 1756

### வேலணை பனம் பொருள் உற்பத்தியாளர் விற்பனவுச் சங்கத்திற்கு மனேச்சர் தேவை

(யாழ்ப்பாணம் டிப்போவுக்கு)

1. தராதரம்: ஜே. எஸ். ஸி. சித்தியடைந்தவராக இருக்க வேண்டும். (2) 22 வயதிற்கு மேற்பட்டவராக இருக்கவேண்டும். (3) பிணை ரொக்கம் 1000 ரூபா. (4) பிணை ஆதனம் 2000 ரூபா. (5) சம்பளம் மாதம் 100 ரூபா.

நியமனம் ஒரு வருடத்திற்கு தற்காலிகமானது. நற்சாட்சிப பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

வ. ஐயாத்துரை, காரியதரிசி. 1751

### காணவில்லை

சங்கானை கிழக்கைச் சேர்ந்த 35 வயதுள்ள வேலாயுதம் ... யத்தை கடந்த 39 நாட்களாகக் காணவில்லை. ... கடையில் கமம் வேலை செய்யும் இவர் கடைசியாக வேட்டியும் ஷேர்ட்டும் அணிந்திருந்தார். பொது நிறம் ... உயரமிருப்பார். இவர் பற்றிய விபரம் அறிந்தவர்கள் கிட்டிய பொலிசாருக்கோ அல்லது சங்கானை ... ஆயுர்வேத வைத்தியர் ... அரியரத்தினத்துக்கோ அறிவிக்கவும். 1754

### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம். மந்திரிமார், அரசியல் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய சுற்றறிக்கை இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து. 12-50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10-50.

வைத்தியர் பரிபூரணானந்தா ... ஸ்லாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

# தூத்துக்குடி - கொழும்பு கப்பல் சேவைகள்

# விரைவில் ஆரம்பமாகும்

## இந்திய கப்பல் போக்குவரத்துக் கார்ப்பரேஷன் அறிவிப்பு

புதுடில்லி, மார்ச் 4

தூத்துக்குடிக்கும் கொழும்புக்குமிடையே நேரடிக் கப்பல் போக்குவரத்துச் சேவையை ஆரம்பிக்க இந்திய கப்பல் போக்குவரத்துக் கார்ப்பரேஷன் முடிவுசெய்துள்ளது.

தேவையான கப்பல்கள் கிடைத்ததும் தூத்துக்குடி-கொழும்பு நேரடி மாமூல் கப்பல் போக்குவரத்து சேவை ஆரம்பிக்கப்படுமென்றும் இச் சேவையைத் தொடங்க நீடித்த காலம் பிடிக்காதென்றும் அறிவிக்கப்பட்டது.

இதன் விளைவாகக் கடந்த 60 வருடகாலமாக உபயோகப்பட்டுவந்த தலைமன்னார்-தனுஷ்கோடி கப்பல்பாதை மூடப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## முதல்டெஸ்டில் வெற்றிதோல்வியில்லை

### இந்தியா: 397; 2—199

### நியூஸிலந்து 315; 62—0

சென்னை, மார்ச் 2

**இந்தியாவுக்கும் நியூஸிலாந்துக்குமிடையே இங்கு நான்கு நாட்களாக நடைபெற்று இன்றுடன் முடிவடைந்த முதலாவது கிரிக்கெட் டெஸ்ட், வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. இன்றைய ஆட்டத்தில் இந்திய வீரர் மஞ்சரிகர் ஆட்டமிழக்காமல 102 ஓட்டங்கள் எடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது. அவர் மொத்தம் 14 'பவுண்டரி'கள் எடுத்திருந்தார்.**

**ஸ்கோர் விபரம்**

இந்தியா முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 397 ஓட்டங்கள் எடுத்தது. இரண்டாம் இன்னிங்ஸில் இரண்டு விக்கெட்டுகளை நஷ்டத்திற்கு 199 ஓட்டங்கள் எடுத்தது.

நியூஸிலந்து முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 315 ஓட்டங்கள் எடுத்தது. இரண்டாம் இன்னிங்ஸில் விக்கெட்டுகள் நஷ்டமின்றி 62 ஓட்டங்கள் எடுத்தது.

இந்தியாவுக்கும் நியூஸிலந்துக்குமிடையே இங்கு நடைபெற்றுவரும் முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் நியூஸிலந்து கோஷ்டி தன் முதல் இன்னிங்ஸில் 315 ரன்கள் எடுத்து அவுட்ஆனது.

இன்றைய ஆட்டத்தில் பந்து வீச்சினால் காயம் ஏற்பட்டதால் இந்திய ஆட்டக்காரர் சர்தேசாய் விளையாட முடியாமல் வாபஸ்பெற வேண்டி ஏற்பட்டது.

சதிவழக்கு

## இருவர்மீது புதிய விசாரணைகள்

### நீதியரசர்கள் குழு நியமிக்கப்படும்

கொழும்பு, செவ்வாய்

1962-ம் வருடம் ஜனவரி 27-ந் திகதி அரசாங்கத்தை கவிழ்க்க சதி செய்ததாக சந்தேகத்தின்மீது கைது செய்யப்பட்டு பின்னர் நிபந்தனையுடனான மன்னிப்பு அளிக்கப்பட்டு முடிக்குரிய சாட்சிகளாக்கப்பட்ட கேர்ணல் ஜே. ஏச். வி. டி. அல்விஸ், கேர்ணல் டெறி அபயசிங்கா ஆகியோர் மீது அட்டோர்ணி ஜெனரல் டக்ளஸ் ஜான்ஸ் கடீம் கோர்ட்டில் புதிதாக வழக்குத் தொடர்ந்துள்ளார். இவர்கள் அரசாங்கத்தை கவிழ்க்க, மற்றைய சதிவழக்கு எதிரிகளுடன் சேர்ந்து முயசித்தார்கள் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவர்கள்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின் விபரம் வருமாறு:

கொழும்பு, கழுத்துறை, அம்பலாங்கொடை, காலி மாத்தறை ஆகிய இடங்களிலும் மற்றைய இடங்களிலும் சதிவழக்கின் மற்ற எதிரிகளுடன் மகாராணிக்கெதிராகபோர் புரிய சதி செய்தது; அரசாங்கத்தை பலாத்கார முயற்சியின் மூலம் கவிழ்க்க சதி செய்தது. அல்லது பலாத்காரம் உபயோகிக்க முற்பட்டது. சட்டவிரோதமான நடவடிக்கை மூலம் அரசாங்கத்தை கவிழ்க்க சதி செய்தது.

கேர்ணல் டி அல்விஸ கேர்ணல் டெறி அபயசிங்க ஆகிய இருவர் மீதும் தொடரப்பட்ட வழக்கை விசாரணை செய்ய பிரதம நீதியரசர் மூன்று நீதியரசர்களைக் கொண்ட ஒரு குழுவை நியமிக்கவிருக்கிறார்.

## பஞ்சத்துக்கு 12,000 பேர் பலி

### ஒரே வருடத்தில்

கோலாலம்பூர், மார்ச் 2

மத்திய ஜாவாவின் தென் பகுதியில் கடந்த வருடத்தில் பஞ்சம் காரணமாக 12,000 பேர் மாண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வரட்சி, உணவுப் பொருள்களின் விலை உயர்வே பஞ்சத்துக்கு காரணமாம்!

## மற்றுமொரு பெரும் தாக்குதல்

### வட வியட்னமில்

சைகோன், மார்ச் 1

வட வியட்னம் இராணுவ விநியோகக் கிடங்கு மீதும் துறைமுகம் மீதும் தென்வியட்னாம் அமெரிக்க விமானங்கள் இன்று பலமாகத் தாக்கிப் பெருத்த சேதத்தை ஏற்படுத்தியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது அமெரிக்காவின் 4வது தாக்குதலாகும்.

இத்தாக்குதலில் 7 அமெரிக்க விமானங்கள் சுட்டப்பட்டதாக மாஸ்கோ செய்தியொன்று கூறுகின்றது.

## தயிர் முட்டி அடித்தல்

சுழிபுரம், புதன்

திரு செ. வைத்திலிங்கம் இல்ல முன்றலில் அவ்வூர் பொது மக்களால் தயிர்முட்டி அடித்தல் உற்சவம் நடாத்தப்பட்டது. சிவராத்திரி முன்னிட்டு நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் நூற்றுக் கணக்கான மக்கள் கலந்து கொண்டார்கள். சுழிபுரம் கெலியான் வைரவ கோவிலில் இருந்து தயிர் முட்டியை மேளவாத்திய ஊர்வலத்துடன் கொண்டுவந்தனர்.

## அரசமரம் முறிந்து விழுந்தது

சுழிபுரம், புதன்

சங்கானை அரசடி என அழைப்பதற்கு மூலகாரணமாக விளங்கிய பெரிய அரசமரம், சென்ற புயல்காற்றால் ஒரு பகுதி முறிந்து சேதமடைந்தது. சரி அரைவாசியாக நின்ற அரசமரம் நேற்று பெய்த மழையின் காரணமாக முற்றாக முறிந்து விழ்ந்தது. இதன் காரணமாக பக்கத்திலிருந்த தேநீர்க் கடை கட்டிடம் பலத்த சேதமடைந்தது. சில மணி நேரம் போக்குவரத்து தடங்கல் ஏற்பட்டாலும் பாதை சரி செய்யப்பட்டு போக்குவரத்து சரியாக்கப்பட்டது.

## யாழ்ப்பாணக்கல்லூரி பட்டதாரி மாணவர்பகுதி

### பயிற்றப்பட்ட ஆசிரியருக்கு (ஆங்கிலம், தமிழ்) மாலை வேளைப் போதன வகுப்புகள்

வெளிவாரி மாணவர்களாக பதிவு செய்துகொள்ள பயிற்றப்பட்ட ஆசிரியர்கட்கு இலங்கைப் பல்கலைக்கழகம் அநுமதி கொடுத்துள்ளது.

1966-ம் ஆண்டு நடாத்தப்படும் பின்வரும் இலங்கைப் பல்கலைக் கழகப் பரீட்சைகட்கு வெளிவாரி உரிய போதன வகுப்புகளை 1965-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஆரம்பமாகும் தவணை தொடக்கம் நடாத்த யாழ்ப்பாணக்கல்லூரி உத்தேசித்துள்ளது.

1. பொதுக்கலைத் தகுதிகாண் பரீட்சை,
2. பொது விஞ்ஞானத் தகுதிகாண் பரீட்சை.

மாலை வேளைகளிலும் சனிக்கிழமைகளிலும் போதன வகுப்புகள் நடாத்தப்படும். கல்லூரி பதிவாளரிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்,

வட்டுக்கோட்டை.

20-2-65 1648

## கூட்டம் ஒத்திவைப்பு

வேலணையில் இன்று மாலை நடைபெறவிருந்த தமிழரசுக் கட்சிக் கூட்டம் மழைகாரணமாக ஒத்திப்போடப்பட்டுள்ளது. கூட்டம் 7-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். 1649

## சிவராத்திரி

யாழ்ப்பாணம், வியழன்

மஹாசிவராத்திரி விழாவை முன்னிட்டு சாந்தையர்மடம் ஸ்ரீகற்பகவிநாயகர் ஆலயத்தில் விசேட அபிஷேக ஆராதனை நான்கு ஜாமப் பூசைகள் என்பன நடைபெற்றன. திரு. வ. கந்தசாமி தலைமையில் உபந்நியாசம், பக்திப் பாடல்பஜனை நடைபெற்றன.

திரு. க. முருகேசு 'சிவராத்திரி வழிபாடு' என்னும் பொருள்பற்றிப் பேசும்போது, வருடத்தில் ஒரு இரவையாவது இறைவன் வழிபாட்டில் கழிப்பது மிக மேலானது. சிவராத்திரி விரதம் சைவமக்கள் அனைவருக்கும் மிகவும் விசேடமான விரதமாகும் என்று குறிப்பிட்டார். அதன்பின் திரு. த. சுப்பிரமணியம் 'இறைவழிபாடு' என்னும் பொருள்பற்றியும், திரு. தி. சேதுராமன் 'மாணிக்கவாசகர்' என்னும் பொருள் பற்றியும், செல்வி பா. அருணாசலந்தேவி 'பட்டினத்தார்' என்னும் பொருள் பற்றியும் உபந்நியாசம நிகழ்த்தினார்கள். செல்வி கோ. புஷ்பராணி, மெ ஜெயபாலன் ஆகியோர் பக்திபாடல் பாடினார்கள்.

•

பளை, புதன்

சைவசயத்தின் தலை அங்கமான புண்ணியகாலம் மகா சிவராத்திரி. சிவராத்திரியின் மகிமையைச் சொல்ல எவராலும் முடியாது. இந்தப் புனித இரவிலே மூர்த்திகளும், தேவர்களும், முனிவர்களும், சாதுக்களும், சிவனடியார்களும், தொண்டர்களும் பூசித்து வணங்கி முத்திப்பேறு பெற்றுய்ந்த கதை புராணங்கள் வாயிலாக அறிந்த கொண்ட உண்மை. இந்தப் புண்ணிய தினதன்று விழித்திருந்து இறைவனை பிரார்த்தித்துப் பேரின்பம் எய்துவோமாக

இவ்வாறு பளை ஸ்ரீ பழனி ஆண்டவர் ஆச்சிரமத்தில் திருவல்லிபுரம் தலைமையில் நடைபெற்ற சிவராத்திரிவிழாவின் போது திரு செ. சரவணமுத்து சமய சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டார்

மேற்படி விழாவின்போது பஜனை, பிரார்த்தனை, வழிபாடுகள் ஈஸ்வர ஆராதனைகள் நடைபெற்றன. திருக்கேதீச்சரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் வானொலி மூலம் எடுக்கப்பட்டு ஒலிபெருக்கப்பட்டது. இவ்விழாவில் சிறந்த புராணிகர்களினால் சிவராத்திரி புராணபடிப்பு பயன்சொல்லல் நடைபெற்றது. பச்சிலைப் பள்ளி மக்கள் பக்தி செய்ய பஜனைக்கோஷ்டிகள், பாதயாத்திரை செய்து பல ஆலயங்களையும் வலம்வந்து தரிசித்து சிவபுராணம் முதலான பாராயணங்களை வீதிகள் தோறும் ஓதி வந்தனர் இவ்விழா முன்னைய விழாக்களிலும் பார்க்க அதி விமரிசையாக நடைபெற்றது

## சாவகச்சேரி இருளில் மூழ்கியது

சாவகச்சேரி, வியாழன்

நேற்றிரவு 10 மணிமுதல் சாவகச்சேரியில் மின்சாரம் தடைப்பட்டு விட்டதால், ஆஸ்பத்திரியிலுள்ள நோயாளிகளும், பொது மக்களும் மிகவும் கஷ்டமடைந்தனர். சினிமா காட்சி கூட தடைப்பட்டு பலர் ஏமாற்றத்துடன் செல்ல நேரிட்டது.

மீண்டும் மின்சாரத்தை வழமையான நிலைக்கு கொண்டு வருவதற்கு மூன்று நாட்கள் செல்லுமென்றும், அதுவரை சாவகச்சேரி இருளில் மூழ்கியிருக்கும் என அறிவிக்கப்படுகிறது. இயந்திரக் கோளாறே இதற்குக் காரணம் என அறிவிக்கப்பட்டது.

## "ஈழநாடு" சூறாவளி கஷ்ட நிவாரணநிதி

### உதவிகள் பெற்றோர் விபரம்

சூறாவளியினால் தீவுப்பகுதிகளில தலைவர்களை இழந்தசில குடும்பங்களுக்கு 'ஈழநாடு' சூறாவளி கஷ்டநிவாரணநிதிச் சபையினர் சென்ற சனிக்கிழமை நேரில் சென்று உதவி நிதி வழங்கினர். விபரம் வருமாறு-

இ குமாரசாமியின் தாயார் சின்னத்தங்கம் வேலணை கிழக்கு ரூபா 25-00.

சுப்பிரமணியத்தின் தகப்பன் ஏ. சின்னத்தம்பி, வேலணை கிழக்கு-தாயார், 2 பெண்கள், 5 ஆண்கள், மூத்தவர் வயது 16-இளையவர் வயது 2 ரூபா 75-00

சுந்தரத்தின் மைம பெண் பாக்கியம்-3 ஆண்பிள்ளைகள், 2 பெண்குழந்தைகள், மூத்தவர் வயது 13, இளையவர் வயது 2. ரூபா 75-00

பசுபதியின் தாயார் அன்னம்மா வேலணைகிழக்கு ஒரு பிள்ளை 15 வயது ரூபா 35 00

இ. சிதம்பரநாதன் மனைவி எஸ். இளையதம்பி நயினாதீவு தாய் ரூபா 40-00.

மு. நாகேசுவின் மைத்துனி பெண் கற்பகம் மே/பா சுந்தர் பொன்னுத்துரை, வட்டாரம் 5 நயினாதீவு. ரூபா 45-00

(இந்தப்பணம் காசோலை மூலமாக ஈழநாட்டுக் காரியாலயத்திலிருந்து அனுப்பப்பட்டுள்ளது.)

## "எமது இலட்சியம்"

உடுப்பிட்டி, புதன்

நான் ஒரு கம்யூனிஸ்டாக இருப்பதில் பெருமைப்படுகின்றேன். எங்கள் கட்சி இன்றைய சமூக பொருளாதார விதிகளினால் நசுக்கப்பட்டு, அடிமைப்படுத்தப்பட்டு, சுரண்டப்பட்டு வாழும் பெருவாரி மக்களைக் கொண்டதாக மிளிர்கிறது. சுரண்டலிலும் சண்டாளப் பாதகங்களிலும் கட்டுப்பட்ட அநீத சமூகங்கள், வாழ்விலே வளமில்லாமல், வறுமைக்கு விடிவில்லாமல் பட்டினியாகக் கிடந்த வாழ்ந்து மடியும் ஆயிரமாயிரம் அப்பாவி ஜீவன்களுக்கு வழிசொல்லாமல இருக்கின்றன. இந்தச் சமூகக் கொடுமைகளினாலே கட்டப்பட்ட இச்சமூகங்கள் இவை பற்றி அறியாமல் இருக்கின்றன. எனவே இவைகளை அகற்றவும் ஒழிக்கவும் அரசியல் பொருளாதார ரீதியாகக கம்யூனிஸ்ட் கட்சி போராடி வருகிறது எந்த ரீதியில் எந்த ரூபத்தில் தலைதூக்கினாலும் அடிமைத் தனத்துக் கம்யூனிஸ்ட் கட்சி இடந்தரப் போவதில்லை. அடிமைத்தனை அறுப்பதே கம்யூனிஸ்ட் கட்சியின் இலட்சியமாகும்"

இவ்வாறு காங்கேசன்துறை தொகுதி கம்யூனிஸ்ட் (புரட்சி) அபேட்சகர் டாக்டர் சீனிவாசகம் தமது தொகுதிக்கு விஜய செய்த நெல்லியடி கம்யூனிட் வாலிபர் சங்கப் பிரதிநிதிகள் மத்தியில் பேசுகையில் கூறினார்.

## செனட்டர்கள்

கொழும்பு, புதன்

ஸ்ரீமாவோ அரசாங்கம் வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து பார்லிமெண்ட கலைக்கப்பட்டதன் பின்னர் இதுவரை 5 அரசாங்க கட்சி செனட்டர்கள் எதிர்க் கட்சியில் சேர்ந்துள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி செனட்டர்களான டி. பி. டி. சொய்ஸா, எஸ். டி. எஸ். சோமரத்ன, ஈ. வி. லப்ரோய், வீரவிமலரத்ன ஆகியோர் முன்னர் எதிர்க்கட்சியில் சேர்ந்தனர். இப்பொழுது செனட்டர் திலகரத்னவும் எதிர்க்கட்சியில் சேர்ந்து விட்டார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு மார்ச் மாதம் 4-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.